# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR

## S.C. No. 19/2025

## PROSECUTION WITNESS No - PW11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. ரமாதேவி | **Caste** | : | |
| **Father/ Husband Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of March 2026.**

**(எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எதிரிகள் தரப்பில் பிரிவு 317 குவிமுச–ன் படி மனு தாக்கல் செய்து எதிரியின் அடையாளத்தை பற்றி ஆட்சேபனை செய்யக்கூடாது என்ற நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்.)**

**(R.O.C.No.34833/2025/F1, நாள்.13.06.2025–ன் படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற காணொலி காட்சி விதிகள் 2020–ன் படி கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்ற காணொலி காட்சி அறையிலிருந்து திரு.செந்தில்குமார், காவல் ஆய்வாளர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக ஆஜராகி திருமதி.ஜெயந்தி, இருக்கை எழுத்தர் நிலை 1, அவர்களால் மூலம் உறுதி செய்யப்பட்டு அவர்கள் மூலமாக சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்.) (மேலும் சாட்சிக்கு காணொலி காட்சி வழியாக விசாரணை தட்டச்சு செய்யப்படும் கணினியின் திரை காணொலி காட்சி மூலமாக கணினி திரையிலேயே சாட்சிக்கு Screen Sharing செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டது.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது கோவை மாவட்டம் கருமத்தப்பட்டி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 03.12.2019 ஆம் தேதியன்று நான் பரமத்தி காவல்நிலையத்தில் வட்ட ஆய்வாளராக பணியிலிருந்த போது அன்றைய தினம் அரவக்குறிச்சி காவல்நிலைய ஆய்வாளர் அவர்கள் விடுப்பில் சென்றிருந்தபடியால் மாவட்ட கண்காணிப்பாளர் உத்தரவின் படி அரவக்குறிச்சி காவல்நிலைய நான் கூடுதல் பொறுப்பு ஆய்வாளராக இருந்தேன். கடந்த 03.12.2019 ஆம் தேதியன்று இரவு 10.00 மணிக்கு அரவக்குறிச்சி காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு.சரவணன் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது வாதி கோவிந்தராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகார் மற்றும் கருங்கல் ஒன்று ஆகியவற்றை பெற்று நிலையக்குற்ற எண்.401/2019 ச.பி. 3(2)(e) TNPPDL Act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எனது புலன் விசாரணைக்காக வழக்கு கோப்புகளை என்னிடம் ஒப்படைத்தார். **வாதி கோவிந்தராஜ் கொடுத்த புகார் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**. **உதவி ஆய்வாளர் சரவணன் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை இதுதான். அது ஏற்கனவே அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது**. பின்னிட்டு நான் கடந்த 04.12.2019 ஆம் தேதி காலை 8.15 மணிக்கு இவ்வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான பெத்தான்கோட்டை பிரிவு அருகே சென்று சாட்சிகள் போஜன் மற்றும் ராஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகஜர் இதுதான். **அது அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தயார் செய்த மாதிரி வரைபடம் இதுதான். அது அ.சா.ஆ.11 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது**. பின்னிட்டு சாட்சிகள், வாதி கோவிந்தராஜ், பழனிச்சாமி, ராஜேந்திரன், மாரிமுத்து, போஜன், ராஜா, நடராஜன் மற்றும் செல்வக்குமார் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் எனது புலன்விசாரணையிலிருந்தும் மேற்படி சம்பவங்கள் அனைத்தும உண்மை எனத்தெரியவந்ததால் மேற்படி வழக்கின் தலைமறைவு எதிரிகளை தேடிவந்த நிலையில் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் தடாகோவில் பஸ் நிறுத்தம் அருகே நின்று கொண்டிருந்தவர்களை போலிஸ் பார்ட்டியை பார்த்தவுடன் தப்ப முயன்றவர்களை பிடித்து குற்றம் பற்றி விவரிக்க எதிரிகள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டவர்களை 11.30 மணிக்கு கைது செய்தும் கைதிற்கான காரணத்தை அவர்களது உறவினர்களுக்கு தெரியப்படுத்தியும், பின் சம்பவத்தின் போது எதிரிகள் பயன்படுத்திய TN 47Q8865 என்ற எண்ணுள்ள Hero Honda Splendor என்ற இருசக்கர வாகனத்தை எதிரி முருகேசன் ஆஜர் படுத்தியதை சாட்சிகள் முன்னிலையில் 11.45 மணிக்கு மகஜரில் கைப்பற்றினேன். **நான் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜர் இதுதான். அது அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரிகள் மற்றும் வழக்குச்சொத்துக்களுடன் 13.30 மணிக்கு நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து நிலையப்பாதுகாப்பில் வைத்தும் பின்னிட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின் 5.12.2019 ஆம் தேதி இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட அரசுப்பேருந்து வாகன எண் TN 30 N 1933 என்ற வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் அரவக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். பின்னிட்டு விடுப்பு முடித்து பணிக்கு திரும்பி வந்த அரவக்குறிச்சி காவல்நிலைய ஆய்வாளர் அவர்களிடம் வழக்கு கோப்புகளை ஒப்படைத்தேன். வாதி கோவிந்தராஜ் ஆஜர்

படுத்திய கருங்கல் இதுதான். அது ஏற்கனவே அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

உங்கள் புலனாய்வில் இக்குற்ற சம்பவத்தில் கண்ணுற்ற சாட்சிகள் யார் யார் என்றால் ராஜேந்திரன் மற்றும் மாரிமுத்து ஆகியோர் இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் ஆவார்கள். உங்கள் புலனாய்வில் வழக்குச்சொத்துக்கள் எவற்றை கைப்பற்றியுள்ளீர்கள் என்றால் கருங்கல் மற்றும் எதிரி ஓட்டிவந்த அ.சா.பொ.2 இருசக்கர வாகனம் மற்றும் சேதமடைந்த அரசுப்பேருந்து ஆகியவற்றை கைப்பற்றினேன். நீங்கள் குற்ற சம்பவம் நடந்த இடத்திற்கு செல்லும் வரை அரசுப்பேருந்து அங்கேயே இருந்ததா என்றால் நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது பேருந்து சம்பவ இடத்தில் இல்லை. வழக்குச்சொத்துக்களான அ.சா.பொ.1 கருங்கல்லை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜருக்கு யார் யார் சாட்சிகள் என்றால் உதவி ஆய்வாளரிம் புகார்தாரரால் ஒப்படைக்கப்பட்டது. வழக்குச்சொத்துக்களான அ.சா.பொ.2 இருசக்கர வாகனத்தை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜருக்கு யார் யார் சாட்சிகள் என்றால் சாட்சிகள் போஜன் மற்றும் ராஜா ஆகியோர்கள் ஆவார்கள். அரசுப்பேருந்தை கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ஆய்விற்காக அனுப்பி வைத்தேன். வாதி கோவிந்தராஜ் ஆஜர்படுத்திய TN 30 N 1933 பதிவெண் கொண்ட அரசு பேருந்தை கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ஆய்விற்காக அனுப்பி வைத்தேன். சேதமடைந்த பேருந்தின் கண்ணாடி உடைந்த பகுதியை நீங்கள் புகைப்படம் எடுத்தீர்களா என்றால் நான் புகைப்படம் எடுக்கவில்லை. வாதி கோவிந்தராஜ் புகாரை தபால் மூலம் அனுப்பியுள்ளாரா என்றால் சரியல்ல. நீங்கள் சாட்சிகள் கொடுத்த

வாக்குமூலத்தை சாட்சிகள் கூறியவாறே பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளன என்று சொன்னால் சரியல்ல. தமிழ்புலிகள் கட்சி தலைவர் நாகை திருவள்ளுவன் கைது செய்யப்பட்டதால் அவருடைய கட்சியின் கரூர் மாவட்ட நிர்வாகிகளான எதிரிகள் இருவர் மீது இந்த பொய்யான வழக்கை பதிவு செய்து அவர்களை கைது செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இக்குற்ற வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் சரியாக புலனாய்வு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.24 17:27:15 +0000

மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.